**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 48/2024

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18-ம் நாள் புதன் கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.06.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | சங்கவி (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்

1) 20.05.2015 ம்தேதியிட்ட எதிர்வாதிக்கு பாலசுப்பிரமணியன் எழுதி வைத்த உயில் சான்று நகல் வா.சா.ஆ. 1 ஆகவும்
2) 02.06.2017 ம் தேதியிட்ட உயில் ரத்து பத்திரம் வா.சா.ஆ.2 ஆகவும்
3) 02.06.2017 பாலசுப்பிரமணியன் எனக்கு எழுதிய உயில் அசல் வா.சா.ஆ.3 ஆகவும்
4) பாலசுப்பிர மணியன் இறப்பு சான்று நகல் வா.சா.ஆ.4 ஆகவும்
5) 20.112023 வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ. 5 ஆகவும்
6) அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ. 6 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**